சார்பு நீதிமன்றம், மேலூர்

OS 222/2021

பெயர் : முருககணேசன்

தகப்பனார் பெயர் :சுப்புராஜ்

கணவர் பெயர் :

வயது :45

கிராமம் :மதுரை, ரிசர்வ்லைன்

வட்டம் :மதுரை

தொழில் :வழக்கறிஞர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

18.07.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். எனது ஆதார் அட்டை ஒளிநகல் வா.சா.ஆ.1. 29.12.1972 தேதியிட்ட உமர்ஸா அவர்கள் பெயரில் உள்ள கிரைய பத்திரம் பதிவு நகல் வா.சா.ஆ.2. 22.12.1984 தேதியிட்ட அம்புஜம் பெயரில் உள்ள வீட்டடி மனை கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.3. இந்திரா பெயரில் உள்ள 10.08.2006 தேதியில் உள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 15.02.2007 தேதியிட்ட சித்ரா பெயருக்கு இந்திரா எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 14.05.2012 தேதியிட்ட என் பெயரில் அம்புஜம் அவர்கள் எழுதி கொடுத்துள்ள கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.6. அம்புஜம் பெயரில் உள்ள சர்வே நம்பர் 2/76 கருப்பபிள்ளையேந்தல் கிராமம் பட்டா எண்.172 வா.சா.ஆ.7. சர்வே நம்பர் 2/76 தொடர்பான வில்லங்கசான்றிதழ்

வா.சா.ஆ.8. 22.05.1972 தேதியில் உமர்ஸா அவர்கள் அப்துல்கரிம் சாயுபு அவர்களுக்கு எழுதிகொடுத்த பொது அதிகார பத்திரம் வா.சா.ஆ.9.

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.18 20:20:09 +0530

Sub Judge

Melur